Regional Bulletin / Puducherry / Tamil /18.10/ 20.10.2024 / Script

வணக்கம்

ஆகாஷ்வாணி - புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

**வாசிப்பவர் : வான்மதி**

நாள் 20.10.2024 ஞாயிற்றுக்கிழமை நேரம் : மாலை 6.10 மணி

---

*தலைப்புச் செய்திகள்*

பிரதமர் திரு. நரேந்திர மோடி வாரணாசியில் இன்று 6 ஆயிரத்து 100 கோடி ரூபாய்க்கும் அதிகமான பல்வேறு வளர்ச்சித் திட்டங்களை தொடங்கி வைத்து புதிய திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டினார்.

நடப்பு ஆண்டில் 341 மில்லியன் உணவு தானிய உற்பத்திற்கு இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளதாக மத்திய வேளாண் அமைச்சர் திரு.சிவராஜ் சிங் சௌஹான் தெரிவித்துள்ளார்.

மத்திய கல்வி அமைச்சர் திரு. தர்மேந்திர பிரதான், சிங்கப்பூர் மற்றும் ஆஸ்திரேலியா நாடுகளுக்கு இன்று முதல் அடுத்த 7 நாட்களுக்கு சுற்றுப்பயணம் மேற்கொள்ள உள்ளார்.

வங்கக் கடலில் புதிய காற்றழுத்த தாழ்வுப்பகுதி நாளை உருவாகக் கூடும் என்று இந்திய வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

மோடி வாரணாசி (16)

பிரதமர் திரு. நரேந்திர மோடி தனது சொந்த மக்களவை தொகுதியான வாரணாசியில் இன்று 6 ஆயிரத்து 100 கோடி ரூபாய்க்கும் அதிகமான பல்வேறு வளர்ச்சித் திட்டங்களை தொடங்கி வைத்து புதிய திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டினார். ஒருநாள் பயணமாக இன்று வாரணாசி சென்ற அவர், பிற்பகல் ஆர்.ஜே. சங்கரா கண் மருத்துவமனையைத் தொடங்கி வைத்தார். வாரணாசியிலுள்ள இந்த கண் மருத்துவமனை சங்கர் நேத்ராலயாவின் 14ஆவது மருத்துவமனையாகும். இது ஒவ்வொரு ஏழை நோயாளிகளுக்கு 30ஆயிரத்துக்கும் மேற்பட்ட அறுவை சிகிச்சைகளை செய்து வருகிறது. 110 கோடி ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ள இந்த மருத்துவமனை, உலகத்தரம் வாய்ந்த கண் அறுவை சிகிச்சைகளை மேற்கொள்ளும் திறன் கொண்டதாகும். தொடர்ந்து இன்று மாலை, வாரணாசி, லால்பகதூர் சாஸ்திரி விமான நிலையத்தில் 2 ஆயிரத்து 870 கோடி ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ள ஓடுபாதை மற்றும் புதிய விமான நிலைய கட்டிடத்திற்கும் அவர் அடிக்கல் நாட்டவுள்ளார்.

ராஜஸ்தான் விபத்து - மோடி (11)

ராஜஸ்தான் மாநிலம், தோல்பூரில் தேசிய நெடுஞ்சாலையில் நேற்றிரவு நடந்த சாலை விபத்தில் 12 பேர் உயிரிழந்தனர். விபத்தில் உயிரிழந்தவர்களுக்கு பிரதமர் திரு. நரேந்திர மோடி இரங்கல் தெரிவித்துள்ளார். இது தொடர்பாக, அவர் தமது எக்ஸ் தள பதிவில், மாநில அரசின் மேற்பார்வையின் கீழ், பாதிக்கப்பட்டவர்களுக்குத் தேவையான அனைத்து உதவிகளும், உள்ளூர் நிர்வாகம் ஈடுபட்டு வழங்கும் என்று தெரிவித்துள்ளார். விபத்தில் உயிரிழந்தவர்களுக்கு பிரதமரின் தேசிய நிவாரண நிதியில் இருந்து, ஒவ்வொரு குடும்பத்தினருக்கும் 2 லட்சம் ரூபாயும், காயமடைந்தவர்களுக்கு 50 ஆயிரம் ரூபாயும் வழங்கப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

மோடி - நன்றி (13)

மகளிர் சக்தியின் மகத்தான ஆதரவு வளர்ச்சியடைந்த பாரதத்தை உருவாக்குவதற்கான முக்கித்துவத்தை அளித்திருப்பதாக பிரதமர் திரு.நரேந்திர மோடி பெருமிதம் தெரிவித்துள்ளார். ஒடிசாவில் நடைபெற்ற பாஜக உறுப்பினர் சேர்க்கை முகாமிற்கு வருகை தந்த பழங்குடியின பெண் ஒருவர், தங்களின் நலனுக்காக பல்வேறு திட்டங்களை மத்திய

அரசு செயல்படுத்தி வருவதற்கு நன்றி தெரிவித்தார். மேலும் பழங்குடியின இனத்தவரின் மேம்பாட்டிற்கு அதிக முக்கியத்துவம் அளித்து வரும் பிரதமரின் ஆர்வத்திற்கு நன்றி தெரிவிக்கும் வகையில் 100 ரூபாயை பரிசாக அளித்துள்ளார். பழங்குடியின பெண் குறித்த இந்த தகவலை அம்மாநில பாஜக தலைவர் தமது எக்ஸ் தளத்தில் பதிவிட்டுள்ளார். இந்த பதிவிற்கு பிரதமர் வெளியிட்டுள்ள பதில் பதிவில், பழங்குடியின பெண்ணின் பாசம் தன் மனதை தொட்டுவிட்டதாகவும், மகளிர் சக்தியின் இத்தகைய ஆதரவு தமக்கு உந்து சக்தியாக திகழ்கிறது என்றும் தெரிவித்துள்ளார்.

முர்மு - நீர் மேலாண்மை (13)

குடியரசு தலைவர் திருமதி திரௌபதி முர்மு, கடந்த 2023ஆம் ஆண்டிற்கான 5ஆவது தேசிய நீர் விருதுகளை நாளை மறுதினம் புதுடெல்லியில் வழங்கவுள்ளார். நீர் பராமரிப்பை சிறப்பாகச் செயலாற்றிய மாநிலங்கள், மாவட்டங்கள், பஞ்சாயத்துகள், நகர்ப்புற ஊராட்சி அமைப்புகள் உள்ளிட்ட 9 பிரிவுகளில் 38 வெற்றியாளர்கள் இவ்விருதுகளைப் பெறவுள்ளனர். சிறந்த மாநிலம் என்ற பிரிவில் ஒடிசா மாநிலத்திற்கு முதல் பரிசும், உத்தரபிரதேசத்திற்கு 2ஆவது பரிசும்,

குஜராத் மற்றும் புதுச்சேரிக்கு கூட்டாக 3ஆவது பரிசும் வழங்கப்படவுள்ளது. விருது வென்ற ஒவ்வொருவருக்கும் சான்றிதழும், கோப்பையும், சில பிரிவுகளில் ரொக்கப்பரிசும் வழங்கப்படவுள்ளது. நீர் மேலாண்மை மற்றும் நீர் பாதுகாப்பு பற்றிய விழிப்புணர்வை தேசிய அளவில் பரப்புவதற்கு மத்திய அரசு விரிவான ஏற்பாடுகளை செய்து வருவதாகவும், அமைச்சகம் தெரிவித்துள்ளது.

முர்மு சுற்றுப்பயணம் (11)

மூன்று ஆப்ரிக்க நாடுகளில் சுற்றுப்பயணத்தை முடித்துக்கொண்டு குடியரசு தலைவர் திருமதி திரௌபதி முர்மு தாயகம் திரும்பினார். அவரது இந்தப் பயணம் இந்தியா மற்றும் ஆப்ரிக்க நாடுகளுக்கு இடையிலான நட்புறவில் புதிய அத்தியாயம் படைத்திருப்பதாக குடியரசு தலைவர் மாளிகை வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்தப் பயணத்தின்போது அவர் சம்பந்தப்பட்ட நாடுகளின் தலைவர்களுடன், இருதரப்பு உறவுகள் குறித்து பேச்சு வார்த்தை நடத்தினார். அப்போது, முக்கிய துறைகளில் பல்வேறு ஒப்பந்தங்கள் கையெழுத்தாகின. தொடர்ந்து அவர் பல்வேறு கலாச்சார நிகழ்ச்சிகளிலும்

பங்கேற்றார். பின்னர், இந்திய சமுதாயத்தினரின் வரவேற்பு நிகழ்ச்சிகளிலும் அவர் பங்கேற்றார்.

மன்சுன் மாண்டவியா (8)

விளையாட்டுத்துறையில் முதல் 10 நாடுகளில் ஒன்றாக விளங்க மத்திய இலக்கு நிர்ணயித்துள்ளதாக மத்திய இளைஞர் விவகாரம் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் டாக்டர் மன்சுக் மாண்டவியா தெரிவித்துள்ளார். திருவனந்தபரம் கவுடியாரில் நடைபெற்ற மேம்படுத்தப்பட்டு கோல்ப் மைதான திறப்பு விழா நிகழ்ச்சியில் அவர் பங்கேற்றுப் பேசினார். வரும் 2047ஆம் ஆண்டிற்குள் இந்தியாவை வளர்ந்த நாடாக மாற்ற நாட்டின் ஒவ்வொரு குடிமகனும், ஆரோக்கியத்துடன் இருக்க வேண்டும் அவர் வலியுறுத்தினார்.

சிவராஜ் சிங் சௌஹான் (15)

நடப்பு ஆண்டில் 341 மில்லியன் உணவு தானிய உற்பத்திற்கு இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளதாக மத்திய வேளாண் அமைச்சர் திரு.சிவராஜ் சிங் சௌஹான் தெரிவித்துள்ளார். புதுடெல்லியில் இரண்டு நாள் வேளாண் மாநாட்டை அவர் தொடங்கி வைத்து உரையாற்றினார்.

விவசாயிகளின் நலனை உறுதி செய்வதற்காக மத்திய மாநில அரசுகள் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டார். உரம் மற்றும் ரசாயனங்களின் பயன்பாட்டை குறைப்பது மட்டுமல்லாமல் விவசாயிகள் இயற்கை வேளாண்மைக்கு மாறி, உற்பத்தியை அதிகரிக்க வேண்டியது அவசியம் என்றும் அவர் கூறினார். அதே நேரத்தில் உற்பத்திச் செலவைக் குறைத்து, விளைச்சலை அதிகரிக்க அரசு இலக்கு நிர்ணயித்து இருப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார். இதன் மூலம் விவசாயிகளுக்கு, அவர்களின் விளைபொருட்களுக்கு ஏற்ற விலையை வழங்க முடியும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய திரு.சிவராஜ்சிங் சௌஹான் அதிக விளைச்சலை அளிக்கக் கூடிய அளவில் விவசாயிகளுக்கு தரமான விதைகளை வழங்கும் திட்டத்ததை அரசு அறிமுகப்படுத்தி இருப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

தர்மேந்திர பிரதான் (13)

மத்திய கல்வி அமைச்சர் திரு. தர்மேந்திர பிரதான், சிங்கப்பூர் மற்றும் ஆஸ்திரேலியா நாடுகளுக்கு இன்று முதல் அடுத்த 7 நாட்களுக்கு சுற்றுப்பயணம் மேற்கொள்ள உள்ளார். அவரது இந்தப்

பயணத்தின்போது சம்பந்தப்பட்ட நாடுகளின் கல்வியில் முக்கிய ஒத்துழைப்பு மற்றும் ஒருங்கிணைப்பை வளர்க்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. முதல்கட்டமாக சிங்கப்பூர் செல்லும் அவர், அந்நாட்டின் வெளிநாடு வாழ் இந்தியர்களிடம் உரையாற்றுகிறார். தொடர்ந்து நாளை சிங்கப்பூர் பிரதமர் திரு. லாரன்ஸ் வோங் மற்றும் துணை பிரதமர் திரு. கான்கிம் யோங் மற்றும் மூத்த தலைவர்களை சந்தித்துப் பேசவுள்ளார். தொடர்ந்து ஆஸ்திரேலியா செல்லும் அவர் இம்மாதம் 23ஆம் தேதி மெல்போர்னின் கல்வியமைச்சர் திரு. ஜோசன் கிளோவை சந்தித்துப் பேசவுள்ளார். ஆஸ்திரேலிய சர்வதேச கல்வி மாநாட்டிலும் அவர் உரையாற்றுகிறார். தொடர்ந்து ஆஸ்திரேலியாவில் பல்வேறு நிகழ்ச்சிகளிலும் அவர் பங்கேற்கவுள்ளார்.

பாரதிய திவாஸ் (8)

18ஆவது வெளிநாடு வாழ் இந்தியர் தின விழா வரும் ஜனவரி மாதம் ஒடிசா தலைநகர் புவனேஷ்வரில் நடைபெறவுள்ளது. இந்நிகழ்ச்சியில் குடியரசு தலைவர், பிரதமர், உள்ளிட்டோர் பங்கேற்கவுள்ளனர். நாட்டின் வளர்ச்சியில் வெளிநாடு வாழ் இந்தியர்களின் முக்கியத்துவம் குறித்து இந்நிகழ்ச்சியில் எடுத்துரைக்கப்படும். மகாத்மா காந்தி

தென்னாப்பிரிக்காவில் இருந்து மும்பை வந்து சேர்ந்த நாளை நினைவுகூரும் வகையில் இத்தினம் ஒவ்வொரு ஆண்டும் ஜனவரி மாதம் 9ஆம் தேதி கொண்டாடப்படுகிறது.

புதுச்சேரி (10 )

புதுச்சேரியில், டாக்டர் அம்பேத்கர் அரசு சட்டக்கல்லூரியின் முன்னாள் மாணவர் சங்கத்தின் சார்பில், ஒவ்வொரு ஆண்டும், வழங்கப்படும் சட்டக் கல்லூரி மாணவர்களுக்கான உதவித் தொகையை சென்னை உயர் நீதிமன்ற நீதிபதிகள் முன்னிலையில் இன்று வழங்கப்பட்டது. உதவித் தொகையைப் பெற்ற மாணவர்கள் துணைநிலை ஆளுநரை நேரில் சந்தித்து வாழ்த்து பெற்றனர். நிகழ்ச்சியில் சென்னை உயர் நீதிமன்ற நீதிபதிகள் திரு. சுப்ரமணியன், திருமதி கலைமதி, திரு.செந்தில் குமார், திரு. இளந்திரையன், திரு. குமரேஷ்பாபு மாநில உள்துறை அமைச்சர் திரு. நமசிவாயம், சட்டமன்ற உறுப்பினர் திரு.கல்யாண சுந்தரம், சட்டக்கல்லூரி முதல்வர் திரு. ஸ்ரீனிவாசன் ஆகியோர் பங்கேற்றனர்.

மாசுக்கட்டுப்பாட்டு குழுமம் (12 )

உச்ச நீதிமன்றத்தின் உத்தரவுப்படி புதுச்சேரியில் தீபாவளிப் பண்டிகைக்கு 2 மணி நேரம் மட்டுமே பட்டாசு வெடிக்க அனுமதிக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. காலை 6 மணி முதல் 7 மணி வரையிலும், இரவு 7 மணி முதல் 8 மணி வரையிலும் பட்டாசு வெடிக்க அனுமதிக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும், அமைதிப் பகுதிகளாக அறிவிக்கப்பட்ட மருத்துவமனைகள், வழிபாட்டுத் தலங்கள், கல்விக் கூடங்கள் மற்றும் நீதிமன்ற வளாகத்தின் சுற்று வட்டாரங்களில் 100 மீட்டருக்குள் பட்டாசு வெடிக்கக் கூடாது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே, பிறருக்கு இடையூறு இல்லாமல் இனிப்புகள் வழங்கி, விளக்குகளை ஏற்றி புகையில்லா தீபாவளியைக் கொண்டாடுவோம் என்று மாசுக்கட்டுப்பாட்டு குழுமம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வானிலை (4)

வங்கக் கடலில் புதிய காற்றழுத்த தாழ்வுப்பகுதி நாளை உருவாகக் கூடும் என்று இந்திய வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. இது காற்றழுத்த தாழ்வு மண்டலமாக நாளை மறுதினம் வலுப்பெறும் என்றும் வரும் 23ஆம் தேதி புயலாக மாறும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கிரிக்கெட் (6 )

பெங்களூரில் நடைபெற்று வரும் இந்தியா-நியூசிலாந்து அணிகளுக்கு இடையிலான முதலாவது கிரிக்கெட் டெஸ்ட் போடடியில், நியூசிலாந்து அணி 8 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது, 3 டெஸ்ட் போட்டிகள் கொண்ட இத்தொடரின் 2ஆவது போட்டி புனேயில் வரும் 24ஆம் தேதியும், 3ஆவது இறுதிப் போட்டி மும்பையில் அடுத்த மாதம் 1ஆம் தேதியும் நடைபெறும்.

*மீண்டும் தலைப்புச் செய்திகள்*

பிரதமர் திரு. நரேந்திர மோடி வாரணாசியில் இன்று 6 ஆயிரத்து 100 கோடி ரூபாய்க்கும் அதிகமான பல்வேறு வளர்ச்சித் திட்டங்களை தொடங்கி வைத்து புதிய திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டினார்.

நடப்பு ஆண்டில் 341 மில்லியன் உணவு தானிய உற்பத்திற்கு இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளதாக மத்திய வேளாண் அமைச்சர் திரு.சிவராஜ் சிங் சௌஹான் தெரிவித்துள்ளார்.

மத்திய கல்வி அமைச்சர் திரு. தர்மேந்திர பிரதான், சிங்கப்பூர் மற்றும் ஆஸ்திரேலியா நாடுகளுக்கு இன்று முதல் அடுத்த 7 நாட்களுக்கு சுற்றுப்பயணம் மேற்கொள்ள உள்ளார்.

வங்கக் கடலில் புதிய காற்றழுத்த தாழ்வுப்பகுதி நாளை உருவாகக் கூடும் என்று இந்திய வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இத்துடன் இந்த செய்தி அறிக்கை நிறைவு பெறுகிறது. RM/NV/VM